## மியாட் மருத்துவமனையில்

# கல்லீரலில் நோய் பாதித்த 3 பேருக்கு நவீன சிகிச்சை

சென்னை, நவ. 16: மியாட் மருத்துவமனையில் கல்லீரல் பகுதியில் ஏற்பட்ட கட்டியை நவீன சிகிச்சை மூலம் டாக்டர்கள் அகற்றி 3 நோயாளிகளை காப்பாற்றியுள்ளனர்.

விருத்தாசலம் பகுதியை சேர்ந்தவர் வெங்கடேசன் (41). கடந்த ஒரு மாதமாக உடல் சோர்வு மற்றும் அடிவயிறு பகுதியில் வலியால் கஷ்டப்பட்டார். இதையடுத்து சென்னையில் ஒரு தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தார். டாக்டர்கள் சோதனை செய்து, கல்லீரலின் வலது பக்கத்தில் பெரிய கட்டி இருப்பதாக கூறி, கடந்த வாரம் ஆபரேஷன் செய்தனர். ஆபரேஷன் செய்தபோது அதிகளவில் ரத்தம் வெளியேறியதால் மேற்கொண்டு ஆபரேஷன் செய்ய முடியாமல் நிறுத்தப்பட்டது. உடனடியாக அங்கிருந்த மியாட் மருத்துவமனைக்கு நோயாளியை அனுப்பினர்.




கல்லீரலில் கட்டியை அகற்றியது பற்றி விளக்குகிறார் டாக்டர் சுரேந்திரன். அருகில், மியாட் நிர்வாக இயக்குனர் டாக்டர் மோகன்தாஸ், தலைவர் மல்லிகா மோகன்தாஸ், டாக்டர்கள் பாரி, அஜீத் மற்றும் குணமடைந்த நோயாளிகள்.

அங்கு கல்லீரல் நோய் மற்றும் மாற்று அறுவை சிகிச்சைத்துறை தலைவர் டாக்டர் சுரேந்திரன் தலைமையிலான டாக்டர்கள் குழுவினர், வெங்கடேசனின் கல்லீரல் பகுதியில் இருந்த 2.65 கிலோ கட்டியை அகற்றினர். தற்போது அவர் குணமடைந்து வருகிறார்.

அதே போன்று, சென்னை தலைமை செயலகத்தில் பொதுப்பணித்துறையில் அதிகாரியாக பணியாற்றி வருபவர் வெங்கடகிருஷ்ணன் (47). கடந்த ஜூன் மாதம் காய்ச்சல் மற்றும் வயிறு வலியால் பாதிக்கப்பட்டதுடன், வயிறு வீங்கி காணப்பட்டது. இதையடுத்து மியாட் மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டது. ஸ்கேன் பரிசோதனையில் நோய் பாதிப்பு காரணமாக கல்லீரல் பாதிக்கப்பட்டதுடன், வயிறு மற்றும் சிறுநீரகத்திலும் நோய் பரவி இருந்தது. டாக்டர்கள் அறுவை சிகிச்சை செய்து நோய் பாதித்த கல்லீரலின் பாதி பகுதியும், குடலின் ஒரு பகுதியும் வெட்டி எடுத்தனர். இதனால் சிறுநீரகத்துக்கு ஏற்பட இருந்த நோய் பாதிப்பு தடுக்கப்பட்டது.

நாகர்கோவிலை சேர்ந்தவர் ஆறுமுகம் (57). இவருக்கும் கல்லீரலில் கட்டி இருந்தது. இதையடுத்து மியாட் மருத்துவமனைக்கு கடந்த ஜூன் மாதம் வந்தார். இவருக்கு கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை செய்தால் மட்டுமே உயிரை காப்பாற்ற முடியும் என டாக்டர்கள் கூறினர். ஆனால் கட்டி பெரிதாக இருப்பதால் ஆபரேஷன் செய்ய இயலாத நிலை ஏற்பட்டது. இதனால் கதிரியக்க சிகிச்சை அளித்து கட்டியை சுருங்க செய்தனர். பின்னர் கோவையை சேர்ந்த வாலிபர் ஒருவரின் கல்லீரலை தானமாக பெற்று, ஆறுமுகத்துக்கு கடந்த அக்டோபர் 1ம் தேதி கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.

கல்லீரல் நோயால் பாதிக்கப்பட்ட மூன்று பேருக்கு ஆபரேஷன் செய்தது குறித்து மியாட் மருத்துவமனை நிர்வாக இயக்குனர் டாக்டர் மோகன்தாஸ் கூறும் போது, "சென்னையில் முதல் முதலாக, இந்தியாவிலேயே அரசு மருத்துவமனையில் முதன் முதலாகவும் கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை செய்தது ஸ்டான்லி அரசு மருத்துவமனை டாக்டர் சுரேந்திரன். ஸ்டான்லி மருத்துவமனையில் இருந்து ஓய்வு பெற்ற பிறகு தற்போது மியாட் மருத்துவமனையில் கல்லீரல் நோய் சிகிச்சை துறை தலைவராக டாக்டர் சுரேந்திரன் பணியாற்றி வருகிறார். அனைத்து துறை டாக்டர்கள் மற்றும் நவீன கருவிகள் என அனைத்து வசதியும் மியாட் மருத்துவமனையில் உள்ளதால் இதுபோன்ற ஆபரேஷன் வெற்றிகரமாக செய்ய முடிந்தது" என்றார்.